காயல்பட்டினம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் நடவடிக்கைகள்

பிறப்பிப்பவர்: **திரு. எஸ்.மகேஸ்வரன்**

ந.க.எண்: 988/2025/எப்.1 நாள்: 27.01.2026

பொருள்: மனைப்பிரிவு அங்கீகாரம் - தூத்துக்குடி மாவட்டம் - காயல்பட்டினம் நகராட்சி – சர்வே எண் 31/1A1A1ல் 4.19 ஏக்கர் பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைந்துள்ளது - தொழில் நுட்ப அங்கீகாரம் பெறப்பட்டது - மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

பார்வை

1. திரு.R.காலகார்த்திக் என்பவரது விண்ணப்பம் நாள்: 07.10.2025
2. அரசாணை எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 04.05.2017
3. அரசாணை எண். 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 09.12.2020
4. அரசாணை எண். 141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 16.07.2022
5. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் தூத்துக்குடி அவர்களின் தொழில்நுட்ப அனுமதி கடிதம் எண்: B058YFHM/THOOTHUKUDI/2025/TCP நாள்: 21.07.2025
6. தொடர்புடைய ஆவணங்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:12843/2022/டிபி-2 நாள்:20.10.2022

((()))

ஆணை:

தூத்துக்குடி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டினம் நகராட்சி சர்வே எண் 31/1A1A1ல் 4.19 ஏக்கர் பரப்பில் உள்ள (103 மனைகள்) மனை பிரிவுகளாக அமைக்க பார்வை 1ல் காணும் விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் காணும் அரசாணை எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்: 04.05.2017- ன் படி திட்டமில்லாத பகுதிக்கான நில உபயோகம் மாற்ற விதிகள் 2017 விதி 3ன் படி பரிசீலனைக் கட்டணமாக ரூ.1,03,000/- மற்றும் விதி 9-ன் படி மனுதாரர் மனையிடத்திற்கான சந்தை நில மதிப்பீட்டுத் தொகை 3% (மூன்று விழுக்காடு) தொகை ரூ.25,200/- மனை பிரிவு அங்கீகாரம் பெற ஏக்கர் ஒன்றிற்கு ரூ.25,000/- வீதம் 4.19 ஏக்கருக்கு ரூ.1,04,750/- மற்றும் அடிப்படை வசதிக்கான பராமரிப்பு வைப்புத் தொகையாக ரூ.4,19,000/- மற்றும் விளம்பர பலகை வைப்பு தொகை ரூ.1,500/- (மொத்தம் ரூ.6,53,450/-) வரைவோலை எண் 265692 நாள்: 22.01.2026-ன் படி தொகை செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை 5ல் காணும் தூத்துக்குடி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களது தொழில்நுட்பம் (ம) மனைப்பிரிவு அங்கீகார எண். 121/2025/TCP நாள்: 21.07.2025 சிறப்பு நிபந்தனைகளின்படி அங்கீகாரம் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் பார்வை 3,4ல் கண்ட அரசாணையின் படி மாநகராட்சி/நகராட்சி பகுதிகளில் வசதிகளை மனுதாரரே செய்வதற்கு ஒப்பு கொண்டதனடிப்படையில் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இவ்வாணை வழுங்கப்படுகிறது. மேலும் பார்வை 6ல் கண்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு அரசு பொறியியல் கல்லூரி, திருநெல்வேலி அவர்கள் மூலம் மூன்றாம் நபர் ஆய்வு மேற்கொண்டு அதற்கான அறிக்கையும் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் கூடுதல் நிபந்தனைகளுக்குட்பட்டு சர்வே எண் 31/1A1A1ல் 4.19 ஏக்கர் பரப்பில ஏக்கர் பரப்பில் போடப்பட்டுள்ள 103 குடியிருப்பு மனைகள் மனை பிரிவு செய்யப்பட்டதற்கு இதன் மூலம் அங்கீகாரம் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

**நிபந்தனைகள்**

1. அங்கீகார தொழில் நுட்ப அனுமதியும் மற்றும் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கிய எண் குறிப்பிட்டு விளம்பர போர்டு வைத்து புகைப்படம் எடுத்து கொடுக்க வேண்டும்.
2. அங்கீகாரம் வழங்கிய பின்பு அல்லது தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்ட பின்பு மனை பிரிவு செய்யப்பட்டுள்ள அளவுகளில் எவ்வித மாற்றமும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தூத்துக்குடி அவர்களது முன் அனுமதி பெறாமல் செய்யக்கூடாது.
3. மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள பிளாட்டுகளில் வீடு கட்டும் போது சம்பந்தப்பட்ட பிளாட் உரிமையாளர்கள் தனித்தனியே வரைபடம் கொடுத்து நகராட்சி மூலம் கட்டிட அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நில உரிமைதாரர் விற்பனை செய்யும் போது அறிவுறுத்த வேண்டும்.
4. நன்கொடை பத்திரம் மூலம் நகராட்சி அல்லது அரசுக்கு ஒப்படைக்கப்பட்ட இடங்கள் குத்தகைக்கு விடவோ நில உரிமைதாரரே பிளாட் போட்டு விற்பனை செய்வதோ அல்லது சொந்தமாக எடுத்துக்கொள்ளவோ கூடாது இதில் நில உரிமைதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை.
5. மனைப்பிரிவு செய்துள்ள சர்வே எண் 31/1A1A1ல் 4.19 ஏக்கர் பரப்பிற்கு காலி மனை வரி செலுத்தப்படவேண்டும்.

ஆணையாளர்
காயல்பட்டினம் நகராட்சி

27/1/26

பெறுநர்:

திரு. R.காலகார்த்திக்
5, முத்தாரம்மன் கோவில் தெரு
புதூர் பேயன்விளை

**நகல்**

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம்.
2. சார்பதிவாளர் அவர்கள், காயல்பட்டணம்.
3. வட்டாட்சியர் அவர்கள் திருச்செந்தூர்.
4. வருவாய்பிரிவு மற்றும் பொறியியல்பிரிவு,காயல்பட்டணம் நகராட்சி.